بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/05/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 19 அன்னாரது காலத்தில் ஏற்பட்ட முர்தத் ஆகும் குழப்பம் மற்றும் கிளர்ச்சியின் போது அனுப்பி வைக்கப்பட்ட போர்ப் படைகளைப் பற்றிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

யமாமாவில் மிகவும் அதிகமாகப் போர் புரியும் பனூ ஹனீஃபா சமுதாயம் இருந்தது. இவர்கள் பற்றி குர்துபீ விளக்கவுரையில் பின்வரும் இந்த வசனத்தின் விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளதாவது;

سَتُدْعَوْنَ اِلٰى قَوْمٍ اُولِيْ بَاْسٍ شَدِيْدٍ تُقَاتِلُوْنَهُمْ اَوْ يُسْلِمُوْنَ

பொருள்: நீங்கள் அண்மையில் அதிகமாகப் போர் புரியும் ஒரு சமுதாயத்தின் பால் அழைக்கப்படுவீர்கள். ஒன்று நீங்கள் அவர்களுடன் போர் புரிவீர்கள். அல்லது அவர்கள் முஸ்லிம்கள் ஆகிவிடுவர். (அல்ஃபத்ஹ் : 17)

**ராஃபி பின் கதீஜ் அவர்கள் கூறுகிறார்கள்:** நாங்கள் இந்த வசனத்தை ஓதி வந்தோம். ஆனால், இந்த மக்கள் யார் என்று தெரிந்திருக்கவில்லை. எதுவரை என்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களை பனூ ஹனீஃபாவோடு போர் புரிய அழைத்தார்கள். அப்போது தான் இது இந்த சமுதாயத்தைக் குறிக்கிறது என்பது எங்களுக்குத் தெரிய வந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 7 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், அல்லது சிலரது பார்வையில், ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டில், பல்வேறு நாடுகளின் அரசர்களுக்குத் தப்லீக் கடிதங்கள் எழுதினார்கள். அப்போது, ஒரு கடிதத்தை யமாமாவின் அரசன் ஹவ்ஸஹ் பின் அலீக்கும் யமாமா வாசிகள் பெயருக்கும் கூட எழுதினார்கள். பல்வேறு பிரதிநிதிக் குழுக்களைப் போன்று, ஹிஜ்ரீ 9 ஆம் ஆண்டில் பனூ ஹனீஃபாவின் ஒரு பிரதிநிதிக் குழுவும் மதீனா வந்தது. இந்தப் பிரதிநிதிக் குழுவில் முஜாஆ பின் முராரா மட்டுமின்றி, ரஜ்ஜால் பின் உன்ஃபா மற்றும் முஸைலமா கஸ்ஸாப் ஆகியோரும் இருந்தனர்.

இந்தப் பிரதிநிதிக் குழு பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் ஓர் அன்ஸாரி பெண்மணி ரம்லா பின்த் ஹாரிஸ் உடைய விசாலமான வீட்டில் தங்கியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தவற்காகத் தொடர்ச்சியாக பிரதிநிதிக் குழுக்கள் மதீனா வர ஆரம்பித்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் இந்த வீட்டையே பிரதிநிதிக் குழுக்கள் தங்குவதற்காக நிர்ணயித்தார்கள். முஸைலமாவால் இந்தப் பிரதிநிதிக் குழுவோடு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்காக வர முடியவில்லை. அல்லது சில அறிவிப்புகள் எப்படியும்

கிடைக்கின்றன என்றால், அவை இதற்கு நேர்மாறாக உள்ளன. **ஹுஸைர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்:** பொதுவாக, முஸைலமா ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்தித்தான் என்பது தொடர்பாகவே அறிவிப்புகள் உள்ளன. இது தொடர்பாக, ஒருவேளை இரண்டாவது முறை அவன் வந்த போது சந்தித்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில், முஸைலமா கஸ்ஸாப் மதீனா வந்தான். அவன், 'ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் தமக்குப் பிறகு என்னை பிரதிநிதியாக ஆக்கினால் நான் அன்னாருக்குக் கட்டுப்படுவேன்' என்று கூறினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே அவனிடம் சென்றார்கள். அன்னார் கையில் பேரீத்தம் மரத்தின் குச்சி ஒன்று இருந்தது. **அன்னார் கூறினார்கள்:** 'நீ என்னிடம் இந்தக் குச்சியைக் கேட்டாலும் நான் இதைக்கூட உனக்கு ஈய மாட்டேன். உன் தொடர்பாக அல்லாஹ் செய்துள்ள தீர்மானத்தை உன்னால் ஒருபோதும் தாண்டிச் செல்ல முடியாது. ஒருவேளை நீ முகந்திருப்பி விட்டால் அல்லாஹ் உன்னை வேரறுத்து விடுவான். யார் தொடர்பாக எனக்குக் கனவில் பல விஷயங்கள் காட்டப்பட்டனவோ அந்த மனிதனாகவே நான் உன்னைப் பார்க்கிறேன்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் தொடர்பாக, ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கேள்வி கேட்ட போது, ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்:-** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருமுறை நான் உறங்கிக் கொண்டிருந்தேன். அப்போது, நான் எனது கைகளில் இரண்டு தங்கக் காப்புகளைக் கண்டேன். அவற்றின் தன்மை என்னைக் கவலைக்குள்ளாக்கி விட்டது. பிறகு, நான் அவற்றில் ஊதுமாறு எனக்குக் கனவில் வஹீ அறிவிக்கப்பட்டது. ஆக, நான் அவற்றில் ஊதினேன்; அவை பறந்து விட்டன. நான் அதன் விளக்கமாக, எனக்குப் பிறகு வெளிப்படும் இரண்டு பொய்யான நபர்கள் எனப் புரிந்தேன். அறிவிப்பாளர் உபைதுல்லாஹ் கூறினார்: இவர்களில் ஒருவன், ஃபிரோஸ் ஏமனில் கொன்று வீழ்த்திய அன்ஸீ ஆவான். இரண்டாவது முஸைலமா ஆவான்.

இந்தப் பிரதிநிதிக் குழு மீண்டும் யமாமா வந்தடைந்த போது, அல்லாஹ்வின் பகைவன் முஸைலமா முர்தத் ஆகி, நுபுவ்வத்துக்கான வாதம் புரிந்து விட்டான். மேலும், கூறினான்: 'என்னையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு நபித்துவத்தில் இணைக்கப்பட்டுள்ளது.' அவன் தன்னைப் பின்பற்றுபவர்களிடம், "நீங்கள் என்னைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறியபோது, 'அவர் அந்தஸ்த்தில் உங்களை விடக் குறைந்தவர் இல்லை' என்று அன்னார் கூறவில்லையா?" என்று கேட்டான். மேலும், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கூறிய காரணம், அன்னாருக்குத் தாம் நபி என்றும் என்னையும் அன்னாருடன் இதில் இணைக்கப்பட்டு விட்டது என்பதும் தெரிந்திருந்தது' என்றும் கூறினான்.

பிறகு, முஸைலமா தன்னுடைய மார்க்கச் சட்டத்தையே ஆரம்பித்து விட்டான். இட்டுக்கட்டாக மக்களுக்குத் திருக்குர்ஆனைக் காப்பி அடித்தவாறு, மறையை உருவாக்க ஆரம்பித்து விட்டான். அவர்களுக்கு தொழுகையை மன்னித்து விட்டான். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, அவன் இஷா மற்றும் ஃபஜ்ர் ஆகிய இரண்டு தொழுகைகளை மன்னித்து விட்டான். மேலும், மக்களுக்கு மதுவையும் விபச்சாரத்தையும் அனுமதிக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். அத்துடன் அவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நபி என்றும் சாட்சி பகர்ந்து வந்தான். பனூ ஹனீஃபா கோத்திரத்தினர் இந்த விஷயங்களில் அவனோடு ஒருமித்து விட்டனர். முஸைலமாவின் ஆற்றலை

அதிகரித்த மற்றொரு காரணம், யமாமாவில் வசித்து வந்த ரஜ்ஜால் பின் உன்ஃபா என்பவன் இவனோடு சேர்ந்து கொண்டதாகும்.

அவன் ஹிஜ்ரத்துக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மதீனா வந்து விட்டிருந்தான். அங்கே அவன் திருக்குர்ஆன் ஓதினான். மார்க்கக் கல்வி கற்றான். முஸைலமா முர்தத் ஆன போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவனை யமாமா வாசிகளிடம், ஆசிரியனாகவும் முஸைலமாவுக்குக் கட்டுப்படுவதை விட்டும் மக்களைத் தடுப்பதற்காகவும் அனுப்பி வைத்தார்கள். ஆனால், இவன் அதிகக் குழப்பத்திற்குக் காரணம் ஆகிவிட்டான். இவ்வாறே, பொய்யாக அவனது நபித்துவத்தை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் முஸைலமா நபித்துவத்தில் இணைக்கப்பட்டுள்ளான்' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக, ஒரு பொய்யான விஷயத்தையும் கூறினான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்த ஒருநபர், மக்களுக்குத் திருக்குர்ஆனின் போதனைகளைத் தெரியப்படுத்தக்கூடிய ஒரு நபர், முஸைலமாவின் நபித்துவத்துக்கு சாட்சி பகர்கிறார் என்பதை யமாமா வாசிகள் பார்த்த போது, அந்த மக்களால் முஸைலமாவின் நபித்துவத்தை நிராகரிக்க முடியவில்லை. மக்கள் கூட்டங் கூட்டமாக முஸைலமாவிடம் வந்து அவனிடம் பைஅத் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

**முஸைலமா ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒரு கடிதமும் எழுதினான். அதன் வாக்கியங்கள் இவ்வாறு உள்ளன:** அல்லாஹ்வின் தூதன் முஸைலமா தரப்பிலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எழுதப்படும் கடிதம். அம்மா பஃது. பாதி பூமி எங்களுடையது; பாதி குறைஷியர்களுடையது. ஆனால், குறைஷியர்கள் நியாயமாக நடந்து கொள்வதில்லை. **இதற்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:** بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து முஸைலமா கஸ்ஸாபுக்கு (பெரும் பொய்யன் முஸைலமாவுக்கு) எழுதப்படும் கடிதம். அம்மா பஃது. நிச்சயமாக பூமி அல்லாஹ்வுடையதே ஆகும். அவன் தனது அடியாரில் தான் நாடுபவரை அதற்கு உரிமையாளர் ஆக்கிவிடுவான். இறையச்சம் உடையவர்களுக்கே நல்ல முடிவு ஏற்படுகிறது. நேர்வழியைப் பின்பற்றுபவர் மீது சாந்தி உண்டாவதாக!

ஹஸ்ரத் ஹபீப் பின் ஸைத் அன்ஸாரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் இந்தக் கடிதத்தை முஸைலமாவிடம் கொடுத்த போது, அவன், 'முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்பதற்கு நீர் சாட்சி பகர்கிறீரா?' என்று கேட்டான். 'ஆம்' என்று பதில் கிடைத்தது. பிறகு அவன், 'நான் அல்லாஹ்வின் தூதன் ஆவேன் என்பதற்கு சாட்சி பகர்கிறீரா?' என்று கேட்டான். அதற்கு அவர்கள் 'நான் செவிடன் ஆவேன். எனக்குக் கேட்காது' என்று கூறினார்கள். பேச்சைத் தட்டிக் கழித்து விட்டார்கள். முஸைலமா மீண்டும் மீண்டும் இதே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனும் நபி என்று அவர்கள் ஏற்க வேண்டும் என அவன் விரும்பினான். அவன் விரும்பும் பதில் கிடைக்காத போது, அவன் அவர்களின் உடலின் ஓர் உறுப்பை வெட்டி விடுவான். இப்போது ஆமாம் என்று பதில் கூறு, என்ற விதமாக சித்தரவதை செய்வதற்காக அவன் அவர்களின் ஏதாவது ஓர் உடல் உறுப்பை வெட்டி விடுவான். ஹஸ்ரத் ஹபீப் அவர்கள் பொறுமை மற்றும் உறுதிப்பாட்டின் மலையாக நின்றார்கள். எதுவரை என்றால், அவன் அவர்களைத் துண்டு துண்டாக்கிப் போட்டு விட்டான். அவன் கண் முன் ஹஸ்ரத் ஹபீப் (ரலி) அவர்கள் ஹஷாதத் பானத்தை அருந்தினார்கள்.

இப்போது இது வெறும் நுபுவ்வத்துகான வாதம் மட்டும் அல்ல. அதற்கும் மேற்பட்டு, அநீதியும் ஆகும். தன்னை நபியாக ஏற்றுக் கொள்ளாதவர்களுடன் அவன்

எவ்வாறு நடந்து கொண்டுள்ளான்! முஸைலமா யமாமாவில் கிளர்ச்சி எனும் கொடியை ஓங்கச் செய்து விட்டான். யமாமாவில் இருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பணியாளரான ஹஸ்ரத் சமாமா பின் அஸால் அவர்களை வெளியேற்றி விட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களை நோக்கி பல்வேறு படைகளை அனுப்பிய போது, ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை முஸைலமாவை நோக்கியும் அனுப்பினார்கள். மேலும், அவர்களுக்கு உதவி புரிவதற்காக அவர்களுக்குப் பின்னால் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களுக்கு, 'ஷுரஹ்பீல் வருவதற்கு முன்பாக முஸைலமாவுடன் போர் புரிய ஆரம்பிக்கக்கூடாது' என்று வலியுறுத்திக் கூறி இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள். வெற்றியின் புகழ் தமக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்கள் வந்தடைவதற்கு முன்னதாகவே, யமாமா மக்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். ஆனால், அவர்கள் கஷ்டத்தில் சிக்கிக் கொண்டார்கள். மேலும், அவர்கள் தோல்வியை எதிர் கொள்ள நேர்ந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களுக்கு அடுத்த கட்டளை வரும் வரை அங்கேயே தங்கியிருக்குமாறு கட்டளையிட்டார்கள்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களை முஸைலமாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும், அவர்களுக்கு உதவி புரிவதற்காக, அவர்களின் பின்புற படையைப் பாதுகாப்பதற்காக, ஹஸ்ரத் ஸலீத் (ரலி) அவர்களின் தலைமையில் மேற்கொண்டு உதவிப் படைகளையும் அனுப்பி வைத்தார்கள். அவர்களோடு இணைந்து போர் புரிவதற்காக முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் ஒரு குழுவையும் உடன் அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் புத்தாஹ் எனும் இடத்தில், இந்தப் படைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் அவர்களிடம் வந்தடைந்ததும், அவர்கள் யமாமாவை நோக்கிப் பயணமானார்கள். போர் ஆரம்பமாவதற்கு முன்னாலேயே, முஸ்லிம்கள் பனூ ஹனீஃபாவின் ஒரு தலைவனை சிறை பிடித்துவிட்டார்கள். ஆக, ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: பனூ ஹனீஃபாவின் ஒரு தலைவனாக இருந்த முஜாஆ பின் முராரா, ஒரு குழுவோடு வெளியே புறப்பட்ட போது, முஸ்லிம்கள் அவனையும் அவனுடைய கூட்டாளிகளையும் பிடித்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனுடைய கூட்டாளிகளைக் கொன்றுவிட்டார்கள். அவர்களிலேயே ஒருவனான ஸாரியா பின் முஸைலமா பின் ஆமிர் இவ்வாறு ஆலோசனை கூறினான்: 'காலிதே! நீர் யமாமா மக்கள் தொடர்பாக ஏதாவது நன்மை அல்லது தீமையை (அறிய) விரும்பினால், முஜாவை உயிரோடு விடுவைப்பீராக. ஏனென்றால், இவர் போர் மற்றும் அமைதி நாள்களில் உமது உதவியாளராக இருப்பார். அவர்களுக்கு அவன் கூறிய விஷயம் பிடித்துவிட்டது. அவர்கள் முஜாஆவைக் கொல்லவில்லை. சாரியாவையும் உயிரோடு விட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் யமாமாவை நோக்கிச் சென்றார்கள். உறுதியான திட்டம் வகுப்பதற்கான ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களை முன்னால் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாமிய படைகளை ஐந்து பாகங்களாகப் பிரித்தார்கள். இது போருக்கு முன்னால் செய்யப்பட்ட கடைசி வரிசைப்படுத்தலாக இருந்தது. முஸைலமாவோடு இருந்த போர் வீரர்களின் எண்ணிக்கை 40,000 ஆக, அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஒரு லட்சம் ஆக, அல்லது அதைவிட அதிகமாக இருந்தது. ஆனால், முஸ்லிம்களோ 10 ஆயிரத்தை விட

அதிகமாக இருந்தார்கள். பனூ ஹனீஃபா மற்றும் முஸ்லிம்களுக்கு இடையில் மும்முரமான போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் இதற்கு முன்னர் இது போன்ற ஒரு போரை எதிர்கொள்ள நேரிட்டதில்லை. முஸ்லிம்கள் தோல்வி அடைந்து விட்டார்கள். இஸ்லாமியப் படை பின்னோக்கிச் சென்ற பிறகும்கூட, ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களுடைய மனவுறுதி, தைரியம் மற்றும் நிலைத்திருத்தல் ஆகியவற்றில் சிறிதும் சறுக்கம் ஏற்படவில்லை. **அவர்கள் உரத்த குரலில் தம்முடைய படையைப் பார்த்துக் கூறினார்கள்:** முஸ்லிம்களே! தனித்தனியாக ஆகிவிடுங்கள். இவ்வாறு எந்தக் கோத்திரம் சண்டையிடுவதில் எல்லாரையும் விடச் சிறந்த வீரத்தை வெளிப்படுத்தியது என்று நாம் பார்க்கட்டும். இந்த அறிவிப்பின் மூலமாக, ஒரு வகையில், அவர்கள் எல்லாக் கோத்திரத்திடமும் புதிதான ஒரு ரூஹையும் ஒருவர் மற்றவரை முந்தக்கூடிய ஓர் உணர்வையும் ஏற்படுத்தி விட்டார்கள்.

கண்ணியத்திற்குரிய சஹாபா பெருமக்கள் ஒருவர் மற்றவருக்குப் போருக்காக எழுச்சியூட்ட ஆரம்பித்தார்கள். மேலும், 'சூரா பகராவின் மக்களே! இன்று மந்திரம் முறிந்து விட்டது' என்று கூறினார்கள். ஹஸ்ரத் சாபித் (ரலி) பின் கைஸ் அவர்கள் பாதி கால்கள் வரை மண்ணைத் தோண்டி தம்மை அதில் புதைத்துக் கொண்டார்கள். அவர்கள் அன்ஸாரிகளின் கொடியை ஏந்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஹனூத் எனும் திரவியத்தைப் பூசிக் கொண்டார்கள். ஆக, எந்த செயலை மரணித்த பிறகு மக்கள் எனக்கு செய்வார்களோ அதை நானே எனக்கு செய்து கொண்டேன்; மேலும், 'நான் மரணிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்' என்பதை வெளிப்படுத்துகிறார்கள். அறிவிப்பில் வருகிறது. அவர்கள் கஃபன் அணிந்து கொண்டார்கள். மேலும், எதிரிகளோடு போரிடுவதில் உறுதியாக நிலைநின்றார்கள். எதுவரை என்றால், ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மேற்கொண்டு இதன் விளக்கம் உள்ளது. இனிவரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில், பாக்கிஸ்தானின் ஓவ்கடஹ் மாவட்டத்தைச் சேர்ந்த மாஸ்டர் முனவ்வர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய அப்துஸ் ஸலாம் சாஹிப் ஷஹீத் அவர்களின் ஷஹாதத் சம்பவத்தையும் மர்ஹூம் அவர்களின் புகழுக்குரிய நற்பண்புகளையும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.*

*மேலும், பாக்கிஸ்தானின் ஃபைஸலாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த ஷேக் சயீதுல்லாஹ் சாஹிப் அவர்களின் மகன் ஸுல்ஃபிக்கார் அஹ்மத் சாஹிப் மற்றும் கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மலிக் தபஸ்ஸும் மக்ஸூத் சாஹிப் ஆகிய இரு மர்ஹூம்களின் நற்குறிப்புகளையும் எடுத்துரைத்த பிறகு, இவர்கள் அனைவரின் ஜனாஸா காயிப் தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**